

# 1

# அகீதா (நம்பிக்கைக் கோட்பாடு)



பொதுவாக மனித வாழ்வு நம்பிக்கையின் அடிப்படையிலேயே எழுப்பப்பட்டி ருக்கிறது. அன்றாட வாழ்வில் மனிதனை இயக்குவது கூட அவனிடம் காணப்படும் நம்பிக்கையே. ஒரு முஸ்லிமைப் பொறுத்த வரையில் அவனது வாழ்வு நம்பிக்கையின் அடிப்படையில் எழ வேண்டும், இறுதிவரை அவனை அந்நம்பிக்கையே இயக்க வேண்டும் என இஸ்லாம் விரும்புகின்றது. இதனாலேயே அல்குர்ஆன் மூன்றிலொரு பகுதிக்கும் அதிகமாக நம்பிக்கையைப் பற்றிக் கூறியுள்ளது. எழுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் ஈமானுடன் இணைத்து அமல்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நான் யார்? உலகில் எனது பணி யாது? எனது முடிவு என்ன? இவை போன்ற வாழ்வின் அடிப்படை வினாக்களுக்கு ஒரு முஸ்லிம் ஈமானை அடிப்படையாகக் கொண்டே விடை காண வேண்டும். இந்த வகையில் நம்பிக்கை இஸ்லாத்தில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

அகீதா அல்லது அகாஇத் எனும் சொற்கள் நம்பிக்கையைக் குறிக்கவே பயன்படுத்தப்படுகின்றன. இஸ்லாமிய வழக்கில் அகீதா என்பது 'இறுதியானதும் உறுதி யானதுமான சான்றுகளைக் கொண்டு கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கைகளைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.

அல்லாஹ்வால் தேர்ந்தெடுக்கப்பட்ட தூதர்கள் அனைவரும் ஒரே அகீதாவையே போதித்துள்ளனர் என்பது அல்குர்ஆனின் சாட்சியமாகும். 'நூஹுக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே அவன் உங்களுக்கும் மார்க்கமாக்கியிருக்கிறான். ஆகவே, நபியே நாம் உமக்கு வஹி மூலம் அறிவிப்பதும், இப்ராஹீமுக்கும் மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால், நீங்கள் அனைவரும் சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள் என்பதேயாகும்' **(42:13)** என அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

இஸ்லாமிய வரலாற்றில் பல்வேறு கலைகள் தோற்றம் பெற்றபோது, இஸ்லாத்தின் நம்பிக்கைகளைத் தொகுத்துத் தருவதற்காகத் தோற்றம் பெற்ற ஒரு கலையே இல்முல் அகீதா அல்லது இல்முல் அகாஇத் எனும் கலையாகும்.

அல்குர்ஆனும் ஸுன்னாவுமே இல்முல் அகீதாவுக்கு அடிப்படையாக அமைந் துள்ளன. இஸ்லாத்தின் அடிப்படை நம்பிக்கைகள் பற்றி அவை கூறியுள்ளன. உதாரணமாக ஜிப்ரீல் (அலை) அவர்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம்

'ஈமானைப் பற்றி எனக்குக் கூறுவீராக' என வினவியபோது, 'அல்லாஹ்வையும் அவனது மலக்குகளையும், அவனது வேதங்களை யும், அவனது தூதர்களையும், மறுமை நாளையும் விசுவாசிப்பதும் நன்மையும், தீமையும் இறை நாட்டப்படியே இடம்பெறும் என விசுவாசிப்பதும் தான் ஈமானாகும்' என பதிலளித்தார்கள். (புஹாரி)

மேற்குறிப்பிட்டுள்ள ஹதீஸ் ஆறு பிரதான நம்பிக்கைகளையும் எடுத்தியம்புகின்றது.

01. **அல்லாஹ் பற்றிய நம்பிக்கை:** இப்பிரிவில் அல்லாஹ் இருக்கின்றான், அவன் ஒருவன் என்பதற்கான ஆதாரங்கள், அவனது பண்புகள், அவனது திருநாமங்கள், அவனது ஆற்றல்கள், சக்திகள் போன்றன விளக்கப்படுகின்றன.

02. **மலக்குகள் பற்றிய நம்பிக்கை:** இப்பிரிவில் மலக்குகள், ஜின்கள் பற்றிய விளக்கங்கள் இடம்பெறுகின்றன. ரூஹ் பற்றிய விளக்கமும் இதில் இடம்பெறுகின்றது.

03. **வேதங்கள் பற்றிய நம்பிக்கை:** மனித சமூகத்துக்கு வழிகாட்ட இறைவன் இறக்கி வைத்த ஸுஹுபுகள் வேதங்கள் பற்றி இங்கு விளக்கப்படுகிறன.

04. **நபிமார்கள் ரஸூல்மார்கள் பற்றிய நம்பிக்கை:** நபிமார்களின் பண்புகள், அவர்களுக்கு வழங்கப்பட்ட அற்புதங்கள், அவர்களது பணிகள் இதில் விளக்கப்படுகின்றன.

05. **மறுமைநாள் பற்றிய நம்பிக்கை:** கப்று, பஃஸ், ஹிஸாப், மீஸான், ஸிராத், ஜன்னா, நார் போன்ற விடயங்கள் இதில் உள்ளடங்குகின்றன.

06. **கழா கத்ர் பற்றிய நம்பிக்கை:** முழுப் பிரபஞ்சத்தையும் இயக்கும் இறைவனது நாட்டம் பற்றி இதில் விளக்கப்படுகின்றது.

آمَنْتُ بِاللّٰهِ وَمَلَائِكَتِهِ وَكُتُبِهِ
وَرُسُلِهِ وَالْيَوْمِ الْآخِرِ وَالْقَدْرِ خَيْرِهِ
وَشَرِّهِ مِنَ اللّٰهِ تَعَالَى

பிரதானமான நம்பிக்கைகள் ஆறினையும் அகீதா துறை அறிஞர்கள் கீழ்வருமாறு நான்கு பிரிவுகளாகப் பிரித்து விளக்குகின்றனர்.

1. **அல் இலாஹிய்யாத்:** அல்லாஹ் பற்றிய நம்பிக்கை, கழாகத்ர் பற்றிய நம்பிக்கையும் அதனுடன் தொடர்புபடும் அனைத்தும் இப்பிரிவில் உள்ளடங்கும்.

2. **அந் நுபுவ்வாத்:** நபிமார்கள், ரஸூல்மார்கள் பற்றிய நம்பிக்கை, வேதங்கள் பற்றிய நம்பிக்கை ஆகியவற்றுடன் தொடர்பான அனைத் தும் இப்பிரிவில் உள்ளடங்கும்.

**3. அர் ரூஹானிய்யாத்:** சட உலகுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்ட மலக்குகள், ஜின்கள், ஷைத்தான்கள், ரூஹ் போன்றன இதில் அடங்கு கின்றன.

**4. அஸ்ஸம்இய்யாத்:** மறுமை வாழ்வுடன் தொடர்புடைய அனைத்து விடயங்களும் இதில் உள்ளடங்குகின்றன. (கப்று, ப∴ஸ், மஹ்ஷர், ஹிஸாப், மீஸான், ஹவ்ழ், ஸிராத், ஜன்னா, நார்)

நம்பிக்கைகள், சிறந்ததாக அமையும்போதுதான் வாழ்க்கை சிறக்க முடியும். வாழ்க்கைக்கு உன்னதமான ஒரு குறிக்கோளை வழங்கி, அதனை வளப்படுத்துகின்ற ஓர் உன்னதமான பணியையே இஸ்லாமிய அகீதா செய்கிறது. இத்தகைய ஓர் அகீதா இன்றி, முஸ்லிம் தனி நபர்களோ, முஸ்லிம் சமூகமோ உருவாக முடியாது.

முஸ்லிம் சமூகத்தில், பிற்காலத்தில் உருவான அரசியல் ரீதியான பிளவுகள், அந்நிய சிந்தனைத் தாக்கங்கள், பகுத்தறிவை எல்லை கடந்து பிரயோகித்தமை முதலிய காரணங்களால் அகீதா அதன் இலகு தன்மையை இழந்தது. சிக்கலானதாக மாறியது. மனிதனை இயக்கி, வாழ்வை வளப்படுத்துவதற்கான உந்து சக்தியாக இருப்பதற்கு பதிலாக அது சண்டைக்கும் சச்சரவுக்கும் வழிவகுக்கும் விடயமாக மாற்றம் பெற்றது. சுருங்கக் கூறின் அகீதா ஒரு பேச்சுபொருளாக மாறி விட்டது.

அகீதா விடயத்தில் பல்வேறுபட்ட பின்னணி கொண்டோர் பேச முற்பட்டபோது முஸ்லிம் சமூகத்தில் வித்தியாசமான பல குழுக்கள் தோற்றம் பெற்றன. ஜபரிய்யா, கதரிய்யா, முர்ஜிஆ, மு∴தஸிலா போன்றன அவற்றுக்கான சில உதாரணங்களாகும்.

இஸ்லாமிய அகீதா இவ்வாறான பிழையான போக்குகளால் பாதிப்புறக் கூடாது. அதன் தூய்மை இழக்கப்படல் கூடாது எனக் கருதிய பல அறிஞர்கள் அதனைப் பாது காக்கப் பல பிரயத்தனங்களை மேற்கொண்டனர். இமாம்களான அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்), அபுல் ஹஸன் அல் அஷ்அரி (ரஹ்), அபூ மன்சூர் அல்மாதுரூதீ (ரஹ்) போன்றோர் இப்பணியில் பெரும் பங்காற்றியுள்ளனர். இவர்கள் அனைவரும் 'அஹ்லுஸ் ஸுன்னா வல் ஜமாஆ' வைச் சேர்ந்தவர்களாவர். இப்பதமானது நபி நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் ஸஹாபாக்களும் நடந்த வழிமுறையில் நடக்கக் கூடியவர்களைக் குறித்து நிற்கிறது. நாமும் இந்த வழிமுறையைப் பின்பற்றி வாழ்வை வளப்படுத்துவோம். இம்மையிலும் மறுமையிலும் பாக்கியவான்களாகுவோம்.

### பயிற்சி

1. அகீதா எனும் சொல்லின் பொருள் யாது?
2. இல்முல் அகீதா தோற்றம் பெற்றமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக.
3. இஸ்லாமிய அகீதாவுக்கு அடிப்படையாக அமைகின்ற மூலாதாரங்கள் எவை?
4. அகீதா கால மாற்றங்களுக்கு ஏற்ப மாறக்கூடிய ஒன்றல்ல என்பதனை அல்குர்ஆன் வசனமொன்றின் மூலம் நிறுவுக.